# தொடக்கநிலை ஐந்தாம் வகுப்பு

# பெற்றோருக்கான பகிர்வரங்கம்

தமிழ்மொழி

உயர்தமிழ்

அடிப்படைத்தமிழ்

# பகிர்வரங்கத்தின் நோக்கம்

- தமிழ்மொழி பாடத்திட்டத்தைப் பற்றி மேலும் தெரிந்துகொள்ள
- தமிழ்மொழி கற்பித்தல் எவ்வாறு நடைபெறுகிறது என்பதை விளக்க
- தமிழ்மொழி பாடத்தில் சிறப்பாகச் செய்ய சில உத்திகள்
- மாணவர்களின் செயல்திறனை மேம்படுத்த பெற்றோருடன் இணைந்து செயல்பட

# தொடக்கநிலை நான்காம் வகுப்பிலிருந்து ...மாற்றங்கள் ?

- மதிப்பெண்
  - 100 ⟶ 200
- கேள்விகளின் எண்ணிக்கை
  - 23 ⟶ 41
- கால அளவு
  - 1 மணி ⟶ 1மணி 40 நிமிடங்கள்
- வினா வகை
- எதிர்பார்ப்புகள்


மொழித்திறன்கள்
Language Skills
அடிப்படை மொழித்திறன்கள்
கொள்திறன்கள்
கேட்டல்
படித்தல்
ஆக்கத்திறன்கள்
பேசுதல்
எழுதுதல்
பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றம்
எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம்
கருத்துப்பரிமாற்றத் திறன்கள்
Ministry of Education

# கேட்டலும் பேசுதலும்

கேட்டலும் பேசுதலும் மொழி கற்றலுக்கு அடிப்படை.

இவற்றை வளர்க்க உற்சாகமூட்டும் நடவடிக்கைகளும் தொழில் நுட்பமும் செம்மையாகப் பயன்படுத்தப்படுகின்றன.

- தமிழோசை / அரும்பு இணையப்பக்கம்
- கலந்துரையாடல்
- தூண்டுதல் / துருவுதல் வினாக்கள்
- குழுவேலை / இணைவேலை

# கேட்டல்

கற்றல் விளைவு:

எழுத்து, பேச்சு, படம் வடிவில் அமைந்த பலவகையான பனுவல்களைக் கேட்டுத் தமது புரிந்துணர்வை வெளிப்படுத்துவர்.

## பேசுதல்

கற்றல் விளைவு:

பேச்சுத் தமிழில் அல்லது எழுத்து தமிழில் தமது எண்ணங்களையும் கருத்துகளையும் சரளமாகவும் தெளிவாகவும் எடுத்துரைக்க வேண்டும்.

# படித்தல்

தன்னம்பிக்கையுடன் மொழியைப் பேசவும் எழுதவும், சொல்வளத்தைப் பெருக்கிக் கொள்ளவும் படித்தல் திறன் அவசியம்.

# படித்தல்

## வளங்கள்

- ✓ சுட்டி மயில்
- ✓ தமிழோசை பாடநூல்
- ✓ சிறுவர் கதை நூல்
- ✓ செய்தித்தாள்
- ✓ நூலகக் கதை புத்தகங்கள்

## நடவடிக்கைகள்

- ✓ நூல் மதிப்பீடு
- ✓ குறிப்பேடு
- ✓ கலந்துரையாடல்
- ✓ கதை நேரம் - தேசிய நூலக வாரியம்

**ஆர்வமூட்டும் மொழிவள நடவடிக்கைகள்**

- இரு வார தாய்மொழி நடவடிக்கைகள்
- போட்டிகள்
- புது அரங்கம் – நாடகப் பட்டறை
- குழுமப் பள்ளிகளுக்கான நடவடிக்கைகள்

**தகவல் தொழில் நுட்ப வளங்கள்**

- iMTL இணையத் தளம்
- பழகு தமிழ்
- Asknlearn
- தட்டச்சுப் பயிற்சி

# மீண்டும் நினைவுகூர்வோம்...

**தேர்வின் நோக்கம்:**

- கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல், **<u>கருத்துப்பரிமாற்றம்</u>** ஆகிய திறன்களை மாணவர்கள் எந்த அளவிற்கு அடைந்து இருக்கிறார்கள் என்பதை அறிதல்.
- தொடக்கநிலைத் தமிழ்மொழிப் பாடத்திட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள <u>கற்றல் விளைவுகளை எந்த அளவிற்கு மாணவர்கள் அடைந்திருக்கிறார்கள் என்பதை மதிப்பீடு செய்தல்.</u>

# புதிதாக இணைக்கப்பட்ட தேர்வுக்கூறு

- பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றம்
- எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம்

# பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றம்

ஒளிக்காட்சியைப் பார்த்து அதில்
உள்ளவற்றைப் பற்றியும்
அதனோடு தொடர்புடைய தம்
கருத்துகளையும், உணர்வுகளையும்
சரளமாகவும் தெளிவாகவும்
கருத்துப் பரிமாற்றம் செய்தல்.

# வாய்மொழித் தேர்வு

**தேர்வுக்குரிய மதிப்பெண்கள்:**

- வாய்விட்டு வாசித்தல் – 20 மதிப்பெண்கள்
- ஒளிக்காட்சியை ஒட்டிய உரையாடல் - 30 மதிப்பெண்கள்

**மொத்தம் - 50 மதிப்பெண்கள்**

- **தமிழ் தேர்வு மொத்த மதிப்பெண்ணில் 25%**

# வாய்விட்டு வாசித்தல்

**உச்சரிப்பும் சொல்லழுத்தமும்**

- நல்ல உச்சரிப்பு
- தெளிவான சொல்லழுத்தம்

**சரளமும் ஓசை நயமும்**

- பொருத்தமான ஓசை நயம்
- தடையின்றித் தயக்கமின்றி வாசித்தல்

# உச்சரிப்பும் சொல்லழுத்தமும்

தெளிவாகவும் சீராகவும் அமைந்த உச்சரிப்பு என்றால் என்ன?

- குறில் நெடில்
- ஒலி வேறுபாட்டுச் சொற்கள்
- எகர ஒகர வேறுபாடு
- எகர ஐகார வேறுபாடு
- ஈற்றெழுத்து

# சரளமும் ஓசை நயமும்

சரளமும் ஓசை நயமும் கொண்ட வாசிப்பு என்றால் என்ன?

- பொருத்தமான இடங்களில் நிறுத்தியும் தயக்கமின்றியும் வாசித்தல்
- பொருத்தமான இடங்களில் ஏற்ற இறக்கத்துடன் வாசித்தல்

# ஒளிக்காட்சியை ஒட்டிய உரையாடல்

- **கருத்துரைப்பும் கருத்து வளர்ச்சியும்**
  - போதுமான அளவு
  - பொருத்தமான கருத்து
  - உரையாடலிலும் கருத்துப்பரிமாற்றத்திலும் தொடர்ச்சியாக ஈடுபடுதல்
  - குறைந்த அளவு தூண்டுதல் தேவைப்படும் நிலை

# ஒளிக்காட்சியை ஒட்டிய உரையாடல்

- மொழியும் சரளமும்
  - மிகத் தெளிவாகவும் சரளமாகவும் தன்னம்பிக்கையுடன் நன்கு **விவரித்துக்** கூறுதல்
  - கருத்துகளை நன்கு **விளக்கிக்** கூறுதல்
  - பொருத்தமான சொல்லாட்சியைப் பயன்படுத்துதல்

# ஒளிக்காட்சியை ஒட்டிய உரையாடல்

வாசிப்புப் பகுதியை வாய்க்குள் வாசித்துக் கொள்வதற்கும் ஒளிக்காட்சியைப் பார்ப்பதற்கும் 10 நிமிடங்கள் அளிக்கப்படும்.

1 நிமிட ஒளிக்காட்சி

மூன்று தூண்டுதல் வினாக்கள்

பகுதியைப் படித்த பிறகு மீண்டும் ஒரு முறை ஒளிக்காட்சியைப் பார்ப்பர்.

# ஒளிக்காட்சியை ஒட்டிய உரையாடல்

- வினா 1 – ஒளிக்காட்சியோடு நெருங்கிய தொடர்புடையது
- வினா 2 & 3 – ஒளிக்காட்சி உணர்த்தும் கருப்பொருளுடன் தொடர்புடையதாக இருக்கும்.

**தலைப்பு: ஒழுங்கு-ஒழுக்கமின்மையைத் தடுத்தல்**

**தூண்டுதல் வினாக்கள் :**

- ஒளிக்காட்சியில் நீ பார்த்த ஒரு ஒழுக்கமிக்கச் செயலைப் பற்றிக் கூறவும்.
- ஒளிக்காட்சியில் நீ பார்த்ததைத் தவிர, வேறு இடத்தில் நீ பார்த்த ஓர் ஒழுக்கமிக்கச் செயலைப் பற்றி கூறவும்.
- பள்ளிகள், ஒழுக்கமிக்கச் சிறுவர்களைப் பாராட்ட வேண்டும் என்று நீ நினைக்கிறாயா? ஏன்?

# எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம்

**நோக்கம்:**

- வினாக்களைப் புரிந்துகொண்டு அவற்றிற்கேற்பத் தம்முடைய எண்ணங்களையும் கருத்துகளையும் சரியாகவும் பொருத்தமாகவும் கருத்துப்பரிமாற்றம் செய்தல்

# **எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம்**

எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றத் திறனைச் சோதித்தல்

- **எதிருரை வினா** (கேட்டல் கருத்தறிதல்)
- **எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்ற வினா** (தெரிவுவிடைக் கருத்தறிதல்)

# எதிருரைப் பனுவல் - மாதிரி வினா

<u>பனுவல் 1</u>

**அண்ணன்:** இந்திரா, உன் முகம் ஏன் வாடியிருக்கு?

**இந்திரா:** அப்படியெல்லாம் ஒன்னுமில்லே அண்ணா....

**அண்ணன்:** இந்திரா, நா உன் அண்ணன்தானே? என்கிட்ட சொல்லு. என்னால் முடிந்த உதவிய செய்யுறேன்.

**இந்திரா:** நா.. நா... வகுப்புக் கணக்குத் தேர்விலே நான் எல்லா கணக்கையும் செய்து முடிக்கல. அதனால தேர்வுல எனக்குத் குறைவான மதிப்பெண்கள்தான் கிடைச்சது. எனக்கு என்ன செய்றதுனு தெரியல.

**அண்ணன்:** ம்ம்ம்..........

1. இந்திராவிடம் அண்ணன் என்ன பதில் சொல்லியிருப்பார்?
    1. நீயே சொந்தமாகப் படி.
    2. எனக்குக் களைப்பாக இருக்கிறது.
    3. நான் உனக்கு உதவி செய்கிறேன்.

# எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம்



D7 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி.



1

# எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம்

**Q30 முதல் Q33 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு தெரிவுவிடை வினாவிற்கும் உரிய விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. சுயவிடை வினாவிற்கு விளம்பரத்திலிருந்து விடையைக் கண்டறிந்து எழுது.**

Q30. மலிவு விற்பனை எதற்காக நடத்தப்படுகிறது?

(1) ஆண்டிறுதியை முன்னிட்டு
(2) வெளியூர்ப் பயணத்தை முன்னிட்டு
(3) புதிய கடிகாரங்களின் விற்பனையை முன்னிட்டு
(4) அதிர்ஷ்டக் குலுக்கு நடைபெறப் போவதை முன்னிட்டு ( )

Q31. அதிர்ஷ்டக் குலுக்கில் பங்கு பெற ஒருவர் என்ன செய்யவேண்டும்?

(1) 16ஆம் தேதியிலிருந்து 26ஆம் தேதிக்குள் அங்குக் கடிகாரம் வாங்கவேண்டும்
(2) டிக் டிக் கடிகாரக் கடையின் மலிவு விற்பனையில் கலந்துகொள்ளவேண்டும்
(3) அங்கு $600 வெள்ளிக்குக் கைக்கடிகாரம் வாங்கவேண்டும்
(4) அங்கு $300 வெள்ளிக்கு மேல் செலவழிக்க வேண்டும் ( )

Q32. துபாய்க்குச் சென்றுவர வாய்ப்புக் கிடைக்கும் இருவருக்கு எது மேலும் மகிழ்ச்சி தரும்?

(1) $500 பற்றுச்சீட்டு
(2) $500 ரொக்கப் பணம்
(3) $500 பயணச்சீட்டு
(4) $200 ரொக்கப் பணம் ( )

# எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம்

Q33. யாருக்கு ஒரு கையடக்கத்தொலைபேசியை இலவசமாகப் பெற வாய்ப்பு உண்டு?

(4 மதிப்பெண்கள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

# உயர்தமிழ்

கற்றல் விளைவு:

பனுவல்களைப் படித்து

புரிந்துணர்வை வெளிப்படுத்த

**உயர் சிந்தனைத் திறன்களை**

அடிப்படையாகக் கொண்டு அமைந்த

வினாக்களுக்கு இலக்கணப் பிழைகளின்றி

விடையளிக்கவேண்டும்.

# உயர் சிந்தனைத் திறன்கள்

- ஊகித்கறிதல்
- காரணகாரியத்தைக் கண்டறிதல்
- கருத்துகளுக்குக்கிடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அறிதல்
- ஒரு கருத்து சரி அல்லது தவறு ஐன்பதைக் காரணங்களோடு விளக்குதல்
- மையக் கருத்தை அல்லது முக்கியக் கருத்துகளை அடையாளங்காணுதல்

# பெற்றோர் பங்கு / ஆதரவு

- ❑ வீட்டில் தமிழில் பேசுதல்
- ❑ ஊக்குவித்தல்
  - ✓ வாசிப்பு (சுட்டி மயில், கதைப்புத்தகம், தமிழ் முரசு)
  - ✓ வானொலி கேட்டல்
  - ✓ தொலைக்காட்சியில் செய்தி பார்த்தல்
  - ✓ பார்த்ததைக், கேட்டதை மற்றும் படித்ததைப் பற்றி உரையாடுதல்

# பெற்றோர் பங்கு / ஆதரவு

- பிள்ளையின் பாடத்தைக் கண்காணித்தல்
  - ✓ வீட்டுப்பாடத்தைச் செய்தல்
  - ✓ குறித்த நேரத்தில் ஒப்படைத்தல்
  - ✓ செயல் திறன்

நன்றி